# டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண். 67, பழைய எண். 28–ஏ, கதவு எண். G–3,
எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை—600 018.
**TELEPHONE +91 44 24330006, FAX +91 44 24328252**
**WEBSITE: www.tcms.bz ; e-mail: Investors@tcms.bz**
**CIN: L74210TN1986PLC012791**


## 37வது வருடாந்திர பொதுக் கூட்டம் – வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னனு வாக்குப் பதிவு மற்றும் புத்தகம் மூடும் அறிவிப்பு

கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வர்த்தகம் தொடர்பாக பரிவர்த்தனை மேற்கொள்ள இந்திய அரசின், கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் (MCA) வெளியிட்ட இதர பொருந்தக்கூடிய அனைத்து விதிகள் மற்றும் பொது சுற்றறிக்கை எண்கள். 20/2020, 14/2020, 17/2020 மற்றும் செக்யூரிட்டீஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா ('SEபி') வெளியிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க, கம்பெனியின் 37வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) வியாழக்கிழமை, 24 ஆகஸ்ட் 2023 அன்று 16.00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொலி காட்சி/இதர ஆடியோ வீடியோ காட்சி மூலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட சுற்றறிக்கைகளின்படி மற்றும் காகித வடிவில் அனுப்புவதில் உள்ள சிரமங்கள் காரணமாக, குறிப்பிட்ட கால வரையறைக்குள் கம்பெனி/வைப்பு பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் 2022-2023 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பின் மின்னனு நகல்கள் அனுப்பப்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 2022-2023 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை மற்றும் 37வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.tcms.bz, மற்றும் பங்கு சந்தை இணையதளம் மற்றும் வைப்பாளர்கள் இணையதளத்தில் கிடைக்கும். இந்த ஆவணங்களை https://instavote.linkintime.co.in அல்லது www.tcms.bzல் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பத்திரம் இல்லாத வகையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் அவர்களது வைப்பு பங்கேற்பாளர்கள் மூலமாக சம்பந்தப்பட்ட வைப்பாளர்களிடம் அவர்களது மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் அவர்களது மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்களை கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் மெசர்ஸ் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு (இனி ஆர்டிஏ என்று குறிப்பிடப்படும்) https://linkintime.co.inல் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது அனைத்து உறுப்பினர்களும் தங்களது வாக்குகளை பதிவு செய்ய தொலைதூர மற்றும் மின்னனு வாக்குப் பதிவு வசதியை கம்பெனி அளிக்கிறது. கூடுதலாக, வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னனு வாக்குப் பதிவு முறையில் வாக்களிக்கும் வசதியையும் கம்பெனி அளிக்கிறது. அது பற்றிய விரிவான நடைமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 91ன்படி வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் **உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் சனிக்கிழமை, 19 ஆகஸ்ட், 2023 முதல் வியாழக்கிழமை, 24 ஆகஸ்ட், 2023 வரை (இரண்டு நாட்களும் உட்பட)** மூடப்பட்டிருக்கும் என்று இதன்மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015ல், விதி 44 மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013ன் பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20ன்படி தொலைதூர மின்னனு வாக்குப் பதிவு வசதிகளை அதன் உறுப்பினர்களுக்கு கம்பெனி அளிக்கிறது. கட் ஆப் தேதியான 28 ஜூலை 2023 அன்று காகித வடிவில் அல்லது பத்திரம் இல்லாத வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தில் இருந்து வேறு இடத்தில் இருந்தாலும் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் (LIIPL) மின்னனு வாக்குப்பதிவு முறை மூலமாக 37வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது மின்னனு முறையில் (remote e–voting) வாக்களிக்கலாம்.

இதன்மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில்,

1. 37வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மின்னனு வாக்குப்பதிவு மூலமாக செயல்படுத்தப்படும்.
2. தொலைதூர மின்னனு வாக்குப்பதிவு 21 ஆகஸ்ட், 2023 அன்று (காலை 9.00 மணி) துவங்குகிறது.
3. தொலைதூர மின்னனு வாக்குப்பதிவு 24 ஆகஸ்ட், 2023 அன்று (மாலை 5.00 மணி) முடிவடைகிறது.
4. மின்னனு வாக்குப்பதிவிற்கு தகுதியானர்களை தீர்மானிக்கும் கட்ஆப் தேதி வெள்ளிக்கிழமை, 18 ஆகஸ்ட், 2023. அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரான ஒரு நபர் மற்றும் கட் ஆப் தேதியான வெள்ளிக்கிழமை, 28 ஜூலை 2023 அன்று பங்குகளை வைத்துள்ளவர்கள் https://instavote.linkintime.co.inக்கு மின்னஞ்சல் அனுப்பி உள் நுழைவு விவரங்கள் மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும் தொலை தூர மின்னனு வாக்குப் பதிவிற்காக LIIPLல் ஏற்கனவே ஒரு நபர் பதிவு செய்திருந்தால் அவர் தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.
5. கம்பெனி/வைப்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாமல் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள தேவையான விவரங்களை அளித்து மின்னனு வாக்குப் பதிவிற்கான உள்நுழைவு விவரங்கள் மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம்.

   i) காகித வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள் - போலியோ எண், பங்குதாரர்கள் பெயர், ஸ்கேன் செய்யப்பட்ட பங்கு சான்றிதழ் நகல் (முன் மற்றும் பின்புறம்), பான் (சுய சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட பான் கார்டு), ஆதார் (சுய சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட ஆதார் கார்டு) உள்ளிட்ட தேவையான விவரங்களை கம்பெனியின் www.tcms.bz அல்லது பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவருக்கு rnt.helpdesk@linkintime.co.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

   ii) மின்னனு வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள் - மின்னனு கணக்கு விவரங்கள் (CDSL-16 digit beneficiary ID or NSDL-16 digit DPID +CLID), பெயர், கிளைண்ட் மாஸ்டர் அல்லது ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையின் நகல், பான் (சுய சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட பான் கார்டு), ஆதார் (சுய சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட ஆதார் கார்டு) உள்ளிட்ட தேவையான விவரங்களை கம்பெனியின் www.tcms.bz அல்லது பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவருக்கு rnt.helpdesk@linkintime.co.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

எனினும் மின்னனு வாக்குப்பதிவிற்காக LIIPLல் ஏற்கனவே ஒரு நபர் பதிவு செய்திருந்தால் அவர் தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

6. ஏதாவது கேள்விகள் இருப்பின் உறுப்பினர்கள் அது குறித்து அறிவிப்பில் அறிவிக்கப்பட்டுள்ள மின்னனு வாக்குப் பதிவு வழிமுறைகளை பார்வையிடலாம் அல்லது அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ's) பிரிவினை பார்வையிடலாம் மற்றும் LIIPL இணையதளத்தில் மின்னனு வாக்குப்பதிவில் உபயோக கையேட்டை பார்வையிடலாம். மின்னனு வாக்குப்பதிவு நடைமுறை தொடர்பாக ஏதேனும் தெளிவாக்கல் தேவைப்படின் அது குறித்து உறுப்பினர்கள் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் மின்னஞ்சல் முகவரி rnt.helpdesk@linkintime.co.in, Tel: 022-49186000ல் அணுகலாம்.
7. வாக்களிக்க தகுதி உள்ள உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது:
   a. தொலைதூர மின்னனு வாக்குப்பதிவு முறை புதன்கிழமை 23 ஆகஸ்ட், 2023 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் LIIPLஆல் நிறுத்தப்படும் மற்றும் ஒரு தீர்மானத்தின்மீது உறுப்பினர் வாக்களித்து விட்டால் பின்னர் அதனை மாற்ற உறுப்பினர் அனுமதிக்கப்படமாட்டார்.
   b. வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னனு வாக்குப் பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.
   c. கட் ஆப் தேதியன்று வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்கள் பதிவேடு அல்லது உறுப்பினர்கள் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயரில் இருக்கும் நபர் மட்டுமே தொலைதூர மின்னனு வாக்குப் பதிவு வசதியை பெற உரிமை உடையவர் ஆவர்.
   d. ஒருவேளை இரண்டு முறைகளிலும் ஒரு உறுப்பினர் வாக்களித்திருந்தால் தொலைதூர மின்னனு வாக்குப் பதிவு மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னனு வாக்குப் பதிவு மூலம் வாக்களித்தால் அது செல்லாததாகக் கருதப்படும்.
8. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னனு வாக்குப் பதிவு மற்றும் வாக்குப் பதிவு நடைமுறைகள் நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையான முறையில் நடைபெறுவதை ஆராய Ms. லட்சுமி சுப்பிரமணியன், மூத்த பார்ட்னர், மெசர்ஸ் லட்சுமி சுப்பிரமணியன் அன்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், அலுவலகம் முகவரி: முருகேச நாயக்கர் வளாகம், எண்.81, கிரீம்ஸ் சாலை, சென்னை 600 006 அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது.
9. மின்னனு வாக்குப் பதிவு முடிவுகள் கம்பெனியினால் அதன் இணையதளம் www.tcms.bz மற்றும் பங்கு சந்தை இணையதளங்கள் bseindia.com மற்றும் nseindia.com ஆகியவற்றில் அறிவிக்கப்படும்.

**ஏதேனும் கேள்விகள் இருப்பின் உறுப்பினர்கள் அது குறித்து https://instavote.linkintime.co.in பதிவிறக்க பிரிவில் உள்ள உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) பிரிவினை பார்வையிடலாம் மற்றும் உறுப்பினர்களுக்கான மின்னனு வாக்குப்பதிவு கையேட்டை பார்வையிடலாம் அல்லது LIIPL தொலைபேசி எண். 022 – 49186000ஐ தொடர்பு கொள்ளலாம் அல்லது enotices@linkintime.co.inக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.**

குழு உத்தரவுப்படி
**A.V.M. சுந்தரம்**
கம்பெனி செயலாளர்

இடம் : மும்பை
தேதி : 27 ஜூலை, 2023